**செய்தி வெளியீடு எண்.65/2017** **நாள்: 26.10.2017**

சென்னைக் குடிநீர் வாரியம், தண்டையார்பேட்டை, இளைய முதலி தெருவில் 1200 எம்எம் விட்டமுள்ள கழிவுநீர் குழாய் வெடிப்பை சீர் செய்யும் வேலையை 28.10.17 பகல் 12.00 மணி முதல் 29.10.17 காலை 8.00 மணி வரை செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

மேற்கண்ட பணியை செய்யும் நேரத்தில் தண்டையார்பேட்டை, ஆர்.கே. நகர், காசிமேடு, இராயபுரம், பிராட்வே, பழைய வண்ணாரப்பேட்டை ப'குதிகளில் உள்ள சில தெருக்களில் கழிவுநீர் சாலைகளில் வழிந்து ஓடும் நிலை ஏற்படும். இதனை அகற்றுவதற்கு வாரியம் கழிவுநீர் ஊர்திகள் மற்றும் கழிவுநீர் உறிஞ்சும் ஊர்திகளை ஏற்பாடு செய்துள்ளது. மேலும் உதவிக்கு 8144930254 மற்றும் 8144930255 ஆகிய தொலைபேசி எண்களை தொடர்பு கொள்ளலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னைக் குடிநீர்